# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 154/மா/2022**
**நாள் : 4.11.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 12.09.2022 நாளிட்ட மனு 13.09.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 154/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 12.09.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-04, வார்டு-43-க்கு உட்பட்ட பகுதியில் பொது மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாக கணக்கர் தெரு உள்ளது. இந்த தெருவின் ஆரம்பத்தில் ஸ்ரீ எல்லை முத்து அம்மன் என்ற பிரசித்திபெற்ற திருக்கோவில் அமைந்துள்ளது. வயதானவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள் என பொது மக்கள் அதிகம் வசிக்கும் இந்த தெரு மற்றும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லும் இந்த கோவிலின் அருகிலேயே சென்னை பெருநகர மாநகராட்சியால் குப்பைகள் சேகரிக்க சுமார் மூன்று எண்ணிக்கையில் மிக மோசமான நிலையில் குப்பை சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

பொது மக்கள் மற்றும் பக்தர்கள் அதிகம் கூடும் இந்த இடத்தில் சுகாதாரமற்ற முறையில், மூடி கூட போடாமல் வைக்கப்பட்டுள்ள இந்த குப்பை சேகரிக்கும் தொட்டிகளால் இங்கேயே வசிக்கும் மக்கள், வந்துபோகும் பக்தர்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் என அனைவருக்கும் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும், இதில் இருந்து எப்போதுமே வெளிப்படும் துர்நாற்றத்தால், இங்குள்ள அனைவரும் பாதிக்கப்படுவதுடன், நோய்தொற்று ஏற்படவும் வாய்ப்பு அதிக அளவில் உள்ளது. சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை விதிகள்-2016ல் சொல்லப்பட்ட விதிகளை கவனத்தில் கொள்ளாமல் விதிகளை

மீறி இங்கே குப்பை சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளதால் இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு சென்னை மாநகராட்சியே பொறுப்பாகும்.

மேற்கண்ட இடத்தில் சுகாதாரமற்ற முறையில், மூடி கூட போடாமல் வைக்கப்பட்டுள்ள இந்த குப்பை சேகரிக்கும் தொட்டிகளை அகற்ற வேண்டி சம்பந்தப்பட்ட மண்டலம் - 04 அதிகாரிகளுக்கு பலமுறை கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. 29.07.2022 அன்றும் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே உயர்திரு ஐயா அவர்கள் இந்த புகாரினை விசாரணைக்கு ஏற்று மேற்கண்ட குப்பை சேகரிக்கும் தொட்டிகளை அகற்றி மாற்று இடத்தில் வைக்க தகுந்த உத்தரவினை மேற்கண்ட அலுவலர்களுக்கு பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 7.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை தண்டையார் பேட்டையில் உள்ள கணக்கர் தெருவின் ஆரம்பத்தில் ஸ்ரீ எல்லை முத்து அம்மன் என்ற பிரசித்திபெற்ற திருக்கோவில் உள்ளது. இக்கோவிலின் அருகிலேயே சென்னை மாநகராட்சியால் குப்பைகள் சேகரிக்கும் 3 தொட்டிகளை வைத்துள்ளனர். அத்தொட்டிகளுக்கு மூடி கூட போடவில்லை. மேற்கண்ட குப்பைத் தொட்டிகளில் சேரும் குப்பைகளினால் ஏற்படும் துர்நாற்றத்தினால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பள்ளி செல்லும் குழந்தைகள், வயதானவர்கள் ஆகியோருக்கு நோய்தொற்று அபாயம் உள்ளது. இது குறித்து மண்டலம்-4 அதிகாரிகளுக்கு மனு கொடுத்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

எனவே, சுகாதாரத்தை பாதிக்கும் மேற்கண்ட குப்பைத் தொட்டிகளை அகற்றிடவும் மொத்தமாக 3 குப்பைத் தொட்டிகளை அகற்றாவிட்டாலும் ஓரிரு குப்பைத் தொட்டிகளையாவது எடுத்து வேறு இடத்தில் வைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் துப்புரவு மேற்பார்வையாளர் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்,**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4 தண்டையார்பேட்டை கணக்கர் தெருவில் உள்ள 3 குப்பைத் தொட்டிகள் கடந்த 15 வருடங்களாக இருந்து வருகின்றன. மேற்கண்ட குப்பைத் தொட்டிகள் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி கடைகள் மற்றும் மார்க்கெட் அமைந்துள்ளதால் அங்கு சேரும் குப்பைகள் மேற்கண்ட குப்பைத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட குப்பைத் தொட்டிகள் பொது மக்களுக்கு எவ்வித இடைஞ்சலுமின்றி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, அதன் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் -4ன் துப்புரவு மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர், வார்டு எண்.43ல் உள்ள கணக்கர் தெருவின் ஆரம்பத்தில் 3 குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு, அதிலிருந்து வரும் துற்நாற்றத்தால், சுகாதார கேடு ஏற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் தன்னுடைய மனு மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, கணக்கர் தெரு ஆரம்பத்தில் உள்ள ஸ்ரீ எல்லை முத்து அம்மன் கோவிலுக்கு அருகில் மூடி கூட போடாமல் மூன்று குப்பைத் தொட்டிகள் வைத்திருப்பது உண்மை என்று அறியமுடிகிறது. அதனால், அவ்வழியாக செல்லும், பள்ளி குழந்தைகள், பொது மக்கள் ஆகியோர்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் என்பதையும் அறிய முடிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் உள்ள துப்புரவு மேற்பார்வையாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டவாறு, மேற்கண்ட குப்பைத் தொட்டிகள் 15 வருடங்களாக உள்ளது என்பதும், அருகிலுள்ள கடைகள் மற்றும் மார்க்கெட்டில் வீணாகும் கழிவுகள் இந்த மூன்று குப்பைத் தொட்டிகளில் கொட்டப்பட்டு வருவதும் அறியமுடிகிறது. ஆனால், துப்புரவு மேற்பார்வையாளர் தெரிவித்தவாறு இந்த கழிவுகளை தினந்தோறும் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது என்ற வாதம் ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர், இம்முறை மன்றத்தில் புகார் மனு அளித்த பின்னரும் மற்றும் இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட நிலையிலும், குறிப்பிட்ட 3 மூடி போடாத குப்பைத் தொட்டிகள் வேறு இடத்திற்கு மாற்றி பொது மக்களுக்கு இடையூறுயின்றி வைக்கப்பட்டுள்ளன என துப்புரவு மேற்பார்வையாளர் அளித்த புகைப்படங்களின் வழியாக அறியமுடிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4 உள்ள துப்புரவு அலுவலர்கள் தினமும் கழிவுகளை அப்புறப்படுத்தாமல் இருக்கும் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மேலும், சென்னை நகர முனிசிபல் நகராட்சி சட்டம் 1989 (T.N. Act IV of 1919) மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் சென்னை நகராட்சி, திடக்கழிவு மேலாண்மை குறித்து துணை விதிகளை 2019 ஆண்டு இயற்றியுள்ளது. அதில் திடக்கழிவு மேலாண்மை குறித்து சென்னை நகராட்சிக்கென்று பொறுப்புகளை குறிப்பிட்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமானது பின்வருமாறு:-

## 5.0. Responsibilities of the Corporation of Chennai

**The Corporation of Chennai shall:-**

1. Arrange for door to door collection of segregated solid waste from all households including slums and informal settlements, commercial, institutional and other non-residential premises. From multi-storage buildings, large commercial complexes, malls, housing complexes, etc., this may be collected from the entry gate or any other designated location;
6. Establish waste deposition centres (at least one number for the area of twenty square kilometers or part thereof and notify the timing) for domestic hazardous waste and give direction for waste generators to deposit domestic hazardous wastes at this centre for its safe disposal.
8. Collect waste from vegetable, fruit, flower, meat, poultry and fish market on day to day basis and promote setting up of decentralized compost plant or bio-methanation plant at suitable locations.
9. Collect separately waste from sweeping of streets, lanes and by-lanes daily, or on alternate days or twice a week depending on the density of population, commercial activity and local situation;
11. Transport segregated bio-degradable waste to the processing facilities like compost plant, bio-methanation plant or any such facility. Preference shall be given for onsite processing of such waste;
12. Transport non-bio-degradable waste to the respective processing facility or material recovery facilities or secondary storage facility;

மேற்கண்ட விதிகளின்படி பொதுமக்களிடம் இருந்து வீடுகள்தோறும் பெறப்படும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என மாநகராட்சியால் பிரித்து பெறப்படும் போது, குப்பை தொட்டிகளுக்கான அவசியம் ஏற்படாது. மேலும் பொது மக்களிடமிருந்து குப்பைகளை பெறும்

நடவடிக்கைகளை மாநகராட்சியால் தினமும் மேற்கொள்ளப்படும் பட்சத்திலும், குப்பைகளை தரம் பிரிக்கும் பட்சத்திலும் குப்பை தொட்டிகளுக்கான அவசியம் எழாது.

பொது மக்களின் சுகாதாரத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில், திடக்கழிவு மேலாண்மை விதிகளை உரிய முறையில் பின்பற்றி, உரிய நடவடிக்கை எடுக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4 உதவி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. மேலும், பொது மக்களின் சுகாதாரத்திற்கு எவ்வித கேடும் ஏற்படா வண்ணம் துப்புரவு மேற்பார்வையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றுவது குறித்து உரிய சுற்றறிக்கை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

**The Deputy Commissioner and Assistant Commissioner of the Zone are directed to ensure that periodical clearance of the garbage and litter accumulated in the area in the instant case. The sanitation staff should be under critical watch by the higher level officials, to avoid such health hazard factors caused by the indifference of the sanitary wing of the zone.**

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

08/11/22

செயலாளர்.

8/11/22

10/10